

© 2012 Ponnivala Publishing




**மறுவர்ணணை**
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

**தமிழாக்கம்**
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

**சித்திரங்கள்**
ரவிசந்திரன & குழு

**வடிவமைப்பு**
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

**ஓப்பச்சர்**
முலர்விழி ராஜ்

**வெளியீட்டாளர்**
பொன்னிவளா
பப்ளிகேசன்



© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.


தொகுதி-02 சித்திரம்-09

## தோல்வியில் முடிந்த சதி

பழைய பகைக்கு பழி தீர்க்க எண்ணிய ஆசாரி வேட்டுவர்களுடன் சேர்ந்து, பல தந்திரங்களைச் செய்து பொன்னிவளநாட்டின் மூத்த சகோதரனை கொல்ல சதி செய்கிறான். ஆனால், விஷ்ணுவின் கருணையால் அவன் தந்திரங்கள் எதுவும் பலிக்காமல், அவனே சங்கரின் வாளுக்கு இரையாகி அழிந்து போனான்.




பொன்னிவளநாட்டு துரோகிகள் எம்மை மூன்று முறை ஏமாற்றிவிட்டனர். முதலில் நம்மிடமிருந்து இரும்பை திருப்பித் தருவதாக கூறி தந்திரமாகக் களவாடிச் சென்றனர். பின் அந்த இரும்பைக் கொண்டே வலையைச் செய்து நம் கிளியையும் பிடித்துச் சென்றனர்.
நாம் அவர்களின் தங்கை என நினைத்து கடத்திய பணிப்பெண்ணையும் காப்பாற்றிச் சென்று விட்டனர். அத்தோடு, அந்த முரட்டு காவலாளி நம்மில் பலரையும் கொன்று விட்டான்.
நாம் மட்டும் அதிஷ்டவசமாக உயிர் தப்பி விட்டோம். இனி இங்கிருப்பவர்கள் எவரும் நம்மை மதிக்கமாட்டார்கள். நமது மானம் மரியாதை எல்லாம் போய், பலர் அழியவும் காரணமான அவர்களை பழிவாங்காமல் விடக்கூடாது.



ஆ... ஆ...
யார் நீங்கள்? எதற்காக புதரில் மறைந்திருக்கிறீர்கள்?
நாங்கள் வீரப்பூரின் வேட்டுவர்கள். பொன்னிவள நாட்டின் முரட்டு காவலாளி எங்களுடைய ஆட்கள் சிலரைக் கொன்று விட்டான். அவனுக்கு பயந்து இங்கே ஒளிந்திருக்கிறோம்.
ஏய் யார் நீ? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
நான் ஆசாரி! இங்கே விறகு பொறுக்க வந்தேன்.
பொன்னிவள நாட்டு தம்பதிகளுக்கு வாரிசுகள் இருக்கிறார்களா? நாங்கள் பலவருடங்களிற்கு முன் அவர்களை கொல்ல முயற்சி செய்தோம்.
என்ன? நீங்களும் கொல்ல முயற்சி செய்தீர்களா? விளக்கமாக சொல்லுங்கள். பயப்பட வேண்டம்!

# தோல்வியில் முடிந்த சதி





கீழே விழுந்தவர்களில் ஒருவன் கனவில் செல்லாத்தா வந்ததாகவும் அரசரும், அரசியும் தங்களின் தலையை தேருக்கு அடியில் வைத்தால் தான் தேர் மேற்கொண்டு நகரும் என்றும் கூறினான்.
இது அவர்களைக் கொல்ல நாங்கள் போட்ட சதித்திட்டம். ஆனால், அந்தத் தேர் அவர்களை நசுக்கிக் கொல்லாமல்...
எங்கள் ஆசாரிகளில் ஆறு போரைக் கொன்றுவிட்டது!
அத்தோடு, கொலை செய்யப் போட்ட திட்டமும் வீணாகியது. அங்கிருந்து தப்பிய ஒரே ஆசாரி நான் மட்டும் தான்!
அவர்களுடைய மகன்களும் மிகவும் பலசாலிகள். எங்கள் இரும்பைத் திருடி வலை செய்து தெய்வசபைக் கிளியை பிடித்துச் சென்று விட்டனர். அத்தோடு அவர்களின் காவலாளி எங்களில் சிலரை அழித்தும் விட்டான்.
நாம் அனைவரும் இணைந்தே அவர்களைப் பழிவாங்கலாம்?
என்னிடம் அருமையான ஒரு திட்டம் இருக்கிறது. நான் பொன்னரை எப்படியாவது வெள்ளாங்குளத்துக்கு வரவழைக்கிறேன்.
பின்னாடியே சங்கரும் அவனைத் தேடி வருவான். அப்பொழுது அவர்கள் இருவரையும் சுலபமாக கொன்று விடலாம்.

## தோல்வியில் முடிந்த சதி



ஆசாரி விரைந்து வீட்டுக்கு வெளியே சென்று முற்றத்தில் நின்ற மரத்தை வெட்டத் தொடங்கினான். அதைப் பார்த்த அவன் மனைவி ஆச்சரியப்பட்டாள்.




அவன் மனைவி குழப்பத்துடன் உள்ளே சென்றாள். ஆசாரி விரைவில் மரத்தை வெட்டி முடித்து விட்டு அதில் ஒரு பாகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு உள்ளே சென்றான்.



# தோல்வியில் முடிந்த சதி










ஆசாரி அந்த மரத்தின் பாகத்தை ஒரு வள்ளமாக செதுக்கி, அதன் மேல் தங்கத்தை உருக்கி முலாம் பூசி முடித்தான்.





நான் சென்று, சிறிது நாட்களின் பின் பெரும் செல்வத்துடன் திரும்பி வருவேன்!
டங்!
அடக்கடவுளே!
தயவு செய்து நீங்கள் போக வேண்டாம்! கதவின் நிலையில் உங்கள் தலையை இடித்துக் கொண்டது ஏதோ கெட்டது நடக்கப் போவதிற்கான அறிகுறியாக தெரிகிறது.
பெண்ணே! அப்படி ஒன்றும் இல்லை. உன் அண்ணன் இந்த வீட்டைக் கட்டும் பொழுது, கதவின் நிலையை தாழ்வாக வைத்துக்கட்டி விட்டான். நீ எதற்கும் கவலைப்படாதே!


# தோல்வியில் முடிந்த சதி




என்னைப்பற்றிக் கவலைப்படாதே! நான் இரண்டு நாட்களில் திரும்பி வந்து விடுவேன்.
இல்லை. நீங்கள் திரும்பி வரவே மாட்டீர்கள் என நான் பயப்படுகிறேன்!
ஆனால், ஆசாரி மனைவி கூறியதைக் கேளாமல் பொன்னிவளநாட்டை நோக்கி புறப்பட்டான்.

# தோல்வியில் முடிந்த சதி





பொழுது சாய்ந்து இருட்டும் நேரத்தில் தங்கப்பாத்திரத்துடன் எங்கே செல்கிறீர்கள்?
வீரப்பூருக்கு இதை எடுத்து செல்கிறேன்.
அங்கிருக்கும் வேட்டுவ அரசரின் வீட்டில் ஒன்பது தங்கப்பாத்திரங்கள் இருக்கின்றனவாம். பத்தாவதாக ஒன்று வேண்டும் என்றனர். அதுதான் எடுத்துச் செல்கிறேன்.
இங்குள்ள மலைப்பகுதிகளில் திருடர்களின் நடமாட்டம் இரவில் அதிகமாக இருப்பதால், இன்று இரவு என் அரண்மனையில் தங்கிவிட்டு காலையில் செல்லுங்கள்.
நன்றி! இதை நான் எப்படி இரவு முழுவதும் பாதுகாப்பது?
வேண்டுமானால் எங்களுடைய பாத்திர அறையில் வைத்துக் காலையில் எடுத்துக் கொள்ளுங்கள். ஏற்கனவே இதைப்போல் எங்களிடம் பன்னிரெண்டு வள்ளங்கள் இருக்கின்றன.
சரி சாமி!



பொன்னரும், ஆசாரியும் அரண்மனையை அடைந்த போது நன்றாக இருட்டி விட்டது.
ஆசாரி! எங்களுடைய வள்ளங்களுடன் உங்களுடையதையும் வைத்துக்கொள்ளுங்கள்.
இல்லை! என்னுடையதை இலகுவாக அடையாளம் காண்பதற்காக, அதை விளக்கிற்கு அருகில் தனியாக வைக்கிறேன்.
சரி! உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்.
விளக்கிற்கு அருகில் வைத்தால் விரைவில் பூசிய தங்கமுலாம் உருகிவிடும்.



இங்கே படுத்து நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அந்த பாத்திரத்தைப் பற்றிய கவலை வேண்டாம். அது பத்திரமாக இருக்கும்.
ம்...ம்.. எப்படி இந்த பொன்னரைக் கொல்வது?
ஆசாரி பாயில் படுத்திருந்த பொழுதும் அவன் மூளை உறங்காது பொன்னரை கொல்வதற்கான வழிகளை யோசித்துக் கொண்டே இருந்தது.
நான் அடுத்த அறையில் வாள்கள் இருப்பதைப் பார்த்தேன். அதைக் கொண்டே பொன்னரை அழித்து விடலாம்.


ஊஊஊஊ...
ஊஊஊஊ...
ஆசாரி இரவு முழுவதும் தூங்காமல் தன் திட்டத்தை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருந்தான்.
இன்றிரவு தான் பொன்னரை கொல்வதற்கு சரியான தருணம்.
அனைவரும் அசந்து தூங்கும் இந்த நேரத்தில் என்னை யாரும் பார்க்கமாட்டார்கள்.



ஆ! அதோ வாள்கள்...
ஆசாரி சத்தங்கள் எழா வண்ணம் பூனை போல் நடந்து, வாள்கள் இருக்கும் அறைக்குள் நுழைந்தான்.
இதைக் கொண்டே பொன்னரை பழி தீர்ப்போன்.
விரைந்து செயல்பட வேண்டும்.
ஆசாரி தான் செய்கின்ற காரியங்களை எவரும் பார்க்கவில்லை என்று எண்ணிக் கொண்டார்.



ஆனால், விஷ்ணு மேலிருந்து இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்.
ஆ.. ஆசாரி பொன்னரைக் கொல்லப் போகிறான்!
நான் அவனைத் தடுக்கிறேன்.
விஷ்ணு தன் சக்தியால் வாளை ஆசாரியின் தலைக்கு மேல் வரச் செய்தார்.
ஆ.. இந்த வாளுக்கு என்ன ஆயிற்று?
ஷ்ஷ்ஷ்...
ஆ... ஐயோ... என் கை போச்சே!


ஆசாரி! எதற்காக இங்கே வந்தார்?
ஆசாரி! வாளை எதற்காக எடுத்தீர்கள்?
சாமி! உறக்கம் வராமல் உலவிய போது உங்கள் வாள்களை பார்த்து, ஒன்றைக் கைகளில் எடுத்தேன். அப்போது கை நழுவி என்னை வெட்டி விட்டது.
என்னிடம் கேட்காமல் எதற்காக எங்கள் வாளை எடுத்தீர்கள்?
இந்த விஷயம் மட்டும் என் தம்பிக்குத் தெரிந்தால், அக்கணமே உங்களை அழித்துவிடுவான். ஜாக்கிரதை!
காயத்திற்கு மருந்திடலாம் வாருங்கள்.
பணிப் பெண்களே! இவருடைய காயத்திற்கு மருந்திட்டு கட்டுப் போடுங்கள்.


இரவு விளக்கின் அருகில் வைத்த வள்ளத்தில் பூசியிருந்த தங்கம் அனைத்தும் உருகியது.
ஆசாரி! கை எப்படி இருக்கிறது?
பரவாயில்லை! நன்றாக இருக்கிறது!
சரி! நான் புறப்படுகிறேன். என்னுடன் வந்து என் தங்கப்பாத்திரத்தை எடுத்துக் கொடுங்கள்.
நான் இங்கேயே இருக்கிறேன், நீங்களே சென்று எடுத்துக் கொள்ளுங்கள்.
இல்லை! நான் என் தங்கப்பாத்திரத்திற்குப் பதிலாக உங்களுடையதை எடுத்துக் கொண்டேன் என்று பழி கூறுவீர்கள். தயவு செய்து என்னுடன் வாருங்கள்!
சரி வருகிறேன்.


ஆ.. நான் நினைத்த படி நடந்துவிட்டது!
அடக்கடவுளே! என் தங்கப்பாத்திரம் எங்கே?
என்னை ஏமாற்றி விட்டீர்களே! என் தங்கப்பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாக மரப்பாத்திரத்தை இங்கே வைத்திருக்கிறீர்கள்.
என்னது?
என் தங்கப்பாத்திரத்தைக் திருப்பிக் கொடு!
எதற்காக நான் உன்னுடையதை எடுக்க வேண்டும்? ஏற்கனவே எங்களிடம் பன்னிரெண்டு பாத்திரங்கள் இருக்கின்றன.
உன்னுடையதை நான் எடுக்கவில்லை.


நீ என்னை அவமானப்படுத்த நான் ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன்!
உனக்கு உதவியதற்கு நீ என்னை திருடன் என்கிறாயா?
நீங்கள் எடுக்கவில்லை என்பதை நான் எப்படி நம்புவது?
சரி! என்ன செய்தால் நீ நம்புவாய்?
நான் சொல்வதை நீங்கள் வெற்றிகரமாக செய்து முடித்தால், நான் நம்புகிறேன் நீங்கள் எடுக்கவில்லை என்று.
இங்குள்ள பெரிய ஆற்றின் ஒருகரையிலிருந்து மறுகரைக்கு நீங்கள் நீந்திக் கடக்க வேண்டும்.
சரி! அப்படியே செய்து உண்மையை நிரூபிக்கிறேன்.



இந்த விஷயம் என் தம்பிக்கு தெரியக் கூடாது. அப்படித் தெரிந்தால், அடுத்த நொடியே அவன் உன்னைக் கொன்றுவிடுவான்.
ஆசாரியும், பொன்னரும் ஆற்றை நோக்கிப் புறப்பட்டனர்.
செல்லும் வழியில் பொன்னர் விஷ்ணுவிடம் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டிக்கொண்டார்.
ஆற்றின் இக்கரையிலிருந்து நீந்தி அக்கரைக்கு வந்து விடுங்கள். அங்கே நான் உங்களுக்காக காத்திருப்பேன்.
மகா விஷ்ணுவே! எனக்கு உதவுங்கள்.


ஆசாரி என்னை சோதிப்பது போல் ஆற்றில் மூழ்கடித்து கொல்லப் பார்கின்றான். பரந்தாமா! நீங்கள் தான் என்னை காக்க வேண்டும்.
விஷ்ணு மாயமாக அவர் முன் தோன்றினார்.
பயம் வேண்டாம்! நான் முன்னால் நீந்திச் செல்கிறேன். என்னைப் பின் தொடர்ந்து வா!
விஷ்ணுவை பின் தொடர்ந்து நீந்திச் சென்ற பொன்னர் ஆபத்தின்றி ஆற்றின் மறுகரையை அடைந்தார்.



இப்பொழுது நான் எடுக்கவில்லை என்பதை நம்புகிறீர்களா?
அட என்ன இது! இன்னும் அந்த வேட்டுவர்கள் காணவில்லை!
பொறுங்கள்! சோதனை இன்னும் முடியவில்லை! நீங்கள் மீண்டும் ஆற்றின் திசைக்கு எதிர்வலமாக நீந்தி கரையை அடைய வேண்டும்.
சரி!
விஷ்ணுவே! மீண்டும் எனக்கு துணையாக இருந்தருளுங்கள்!
பொன்னர் மீண்டும் விஷ்ணுவின் ஆசியுடன் நீந்துவதற்காக ஆற்றில் குதித்தார்.
ஹா...



அதேநேரம் அரண்மனையில் தங்காள் பென்னருக்கு நடப்பவைகளை கனவாக காண்கிறாள்.
சலக்! சலக்!
ஐயோ! கடவுளே அண்ணா!
தங்கையே! என்னை அழைத்தாயா? பெரியண்ணன் எங்கே?
அண்ணா நான் ஒரு கனவு கண்டேன். அதில் நம் பெரியண்ணன் ஆசாரி தன்மேல் கூறிய பழியைப் போக்க ஆற்றில் இறங்கி நீந்திக் கொன்டு இருக்கிறார்.
ஆனால், ஆசாரியே அண்ணனைக் கொல்லத் திட்டம் போடுகிறான். அண்ணா! விரைந்து சென்று நம் அண்ணனைக் காப்பாற்றுங்கள்.



சாம்புகன் எங்கே?
சாம்புகா...! சாம்புகா...!
ம்..! சீக்கிரம் என்னை தொடர்ந்து வா!
சாம்புகா! பெரியண்ணன் ஆபத்திலிருக்கிறார்.



சீக்கிரம் வா சாம்புகா!
சங்கரும், சாம்புகனும் விரைந்து வந்தனர். பொன்னர் ஆற்றில் நீந்திக் கொண்டிருந்தார். அதேநேரம் மறுபுறம் நின்ற ஆசாரி வேறு ஒரு திட்டத்தை தீட்டினான்.
சலக்! சலக்!
இம்முறை சந்தர்பத்தை தவறவிடாமல் நான் அவனைக் கொல்ல வேண்டும்.
அவன் இப்புறம் தண்ணீருக்கு மேலே வரும் போது, இந்த விநாயகர்சிலையை அவன் மேல் தூக்கிப்போட வேண்டும்.


ஆசாரி!
நிறுத்து!
ஷ்ஷ்ஷ்
சலக்! சலக்!


அண்ணா!
என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி!
ஏய்! அங்கே பாருங்கள்!
ஆசாரி கூறியது போல் அவர்கள் இருவரையும் அழைத்து வந்துவிட்டான். அவர்களோடு சேவகனும் அங்கிருக்கிறான்.
அவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்கும் நேரம் வந்துவிட்டது.
ஹா...!வேட்டுவர்கள்! இது ஆசாரியின் வேலையாகத் தான் இருக்கும். சாம்புகா! அவர்களின் தலைகளை வெட்டித் தள்ளு.
தாக்குங்கள்!


ஆ....
ஆ.... ஆ...
ம்.... ஆ...
ஐயோ...!
உ... உ....
ஆ... ஆ...
ஆ... ஆ...
ம்....


ஆ... ஆ...
ம்.... ஆ...!
வேட்டுவர்களுடன் ஆவேசமாக சண்டை இட்டனர். சாம்புகன் பலரைக் கொன்றான். மீதி இருந்தவர்களை பொன்னரும் சங்கரும் தம் வாளினால் வெட்டிச் சாய்த்தனர்.



ஒ.. ஏய்....
அனைவரையும் அழித்து வெற்றியைக் கொண்டாடிய மூவரும், அரண்மனைக்குத் திரும்பி தங்கையைச் சந்தித்தனர்.
தங்காள்! இப்பொழுது நீ சென்று உன் கிளியுடன் நிம்மதியாக விளையாடு!
அண்ணா! நீங்கள் பத்திரமாகத் திரும்பி வந்ததில் மிக்க மகிழ்ச்சி!
நாங்கள் உணவு உண்ட பின் தாயம் விளையாடப் போகிறோம்.
பொன்னிவளநாட்டு பொன்னரையும், சங்கரையும் சதி செய்தாவது கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த ஆசாரியும் இறுதியில் அழிந்தான். அத்தோடு வேட்டுவர்கள் பலரும் உயிரிழந்தனர். இதனால் கோபங் கொண்ட மீதம் உள்ள வேட்டுவர்கள் இவர்களை பழிக்கு பழி வாங்காமல் விடுவார்களா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic22tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!








01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது


26யும் பெற்றுகொள்ள!


ISBN 978-1-927093-63-4


www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com


© 2012 Ponnivala Publishing